**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண்.1927/ஆ5/2025, நாள். /05/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள "முத்தமிழ் கலைஞர் தமிழ் மன்றத்தை" மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட – 2024–2025ஆம் ஆண்டிற்கு பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– RTGS மூலமாக பள்ளிக்கு அனுப்பப்பட்டது – பயனீட்டு சான்று நேரில் சமர்பிக்க கோருதல் – சார்பு

பார்வை
1. 2022–2023ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி துறை மானியக் கோரிக்கை, அறிவிப்பு எண். 01 நாள்.19.04.2022
2. அரசாணை (நிலை) எண். 123, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை நாள்.25.08.2022
3. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.020558/ எம்2/இ1/2025, நாள். 28.04.2025

.....

2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பின் படி அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள "முத்தமிழ் கலைஞர் தமிழ் மன்றத்தை" மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திடும் பொருட்டு பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– வீதம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடிதத்தில் 2024–2025ஆம் ஆண்டிற்கு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள "முத்தமிழ் கலைஞர் தமிழ் மன்றத்தை" மேம்படுத்த பள்ளி ஒன்றுக்கு ரூ.9,000/– வீதம் வழங்கப்பட்டதற்கான பயனீட்டு சான்று கோரப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2024–2025ஆம் ஆண்டிற்கு பள்ளி ஒன்றுக்கு ரூ. 9,000/– வீதம் பார்வை 4–ன் படி RTGS மூலமாக பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, ரூ.9,000/– பெறப்பட்டமைக்கான பயனீட்டு சான்றினை இவ்வலுவலக ஆ5 பிரிவில் 30.05.2025–க்குள் தவறாமல் நேரில் சமர்பிக்குமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பயனீட்டு சான்று

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்

26.05.25

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு / நகரவை / ஆதிதிராவிட நல உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# வேலூர் மாவட்டம்
## தமிழ் மன்றங்கள் மேம்படுத்தி தமிழ்கூடல் நிகழ்ச்சி – 2024–2025
## பயன்பாட்டுச் சான்றிதழ்

2022–2023ஆம் ஆண்டு மான்ய கோரிக்கை அறிவிப்பின்படி, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு அரசாணை (ப) எண்.10, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ.1–1)த்துறை நாள். 18.01.2024–ன்படி, அதற்கான செலவினங்களை மேற்கொள்ள தொடர் செலவினமாக பள்ளி ஒன்றுக்கு ரூ. 9,000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1927/ஆ5/05.05.2025–ன் படி பள்ளிகளின் வங்கி கணக்கில் மின்னனு பரிவர்த்தனை (RTGS) மூலம் வரப்பெற்றது.

கீழ்காணும் படி வங்கி கணக்கில் வரப்பெற்ற தொகை ரூ.9,000/– (ரூபாய் ஒன்பது ஆயிரம் மட்டும்) அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | வங்கி கணக்கு எண் | வங்கி IFSC குறியீடு எண் | வங்கி கணக்கில் பணம் வரப்பெற்ற நாள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

தலைமையாசிரியரின் கையொப்பம்

முத்திரையுடன்